கீழ்க் காணும் செய்தியைத் தங்கள் நாளிதழில் வெளியிட்டு உதவுமாறு வேண்டப்படுகிறது.

# திருவள்ளுவர் பல்கலைக் கழக

# இறுதிப் பருவத் தேர்வுகள்

வேலூர் செப்.-16. வேலூரில் அமைந்துள்ள திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு இறுதிப் பருவத்தேர்வு 16.09.2020 முதல் தொடங்கி 23.09.2020 வரை மொத்தம் ஏழு நாள்கள் ஆன்லைன் மூலமக நடைபெற்றுவருகின்றன. மாணவர்கள் தேர்வு தொடங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக பல்கலைக் கழக இணையத் தளமான www.tvu.edu.in-இல் மாணவர்கள் தமது பதிவெண்ணைப் பதிவு செய்து, வினாத்தாளைப் பதிவிறக்கம் செய்துகொள்ளவேண்டும். இடையில் ஞாயிறு அன்று மட்டும் தேர்வு நடைபெறாது. இறுதியாண்டில் இளநிலை பயிலும் 47,336 மாணவ, மாணவியர்களும் முதுநிலை பயிலும் 7307 மாணவ, மாணவியரும் இறுதிப் பருவத் தேர்வை எழுத உள்ளனர்.

தேர்வுகள் முடிந்த பிறகு விடைத்தாள்கள் உரிய கல்லூரிகளிலிருந்து தேர்வுத் தாள்கள் திருத்தும் மையத்திற்கு அனுப்பிவைக்கப்படும். மையங்களில் தேர்வுத் தாள்கள் திருத்தும் பணி முடிந்த பிறகு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும்.

தமிழக அரசு உயர்கல்வித்துறை மற்றும் திருவள்ளுவர் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவின் வழிகாட்டுதலின்படி இந்தத் தேர்வுகள் நடைபெறுகின்றன.

THIRUVALLUVAR UNIVERSITY REGISTRAR VELLORE-632115

16.9.2020
பதிவாளர்(பொ)

REGISTRAR
THIRUVALLUVAR UNIVERSITY
SERKKADU, VELLORE - 632 115.